சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No. 134/2018

பெயர் திரு. லோகபிராமன் நாள். 02.06.2026
த/பெ. தேவேந்திரன்

**<u>பிரதிவாதி சாட்சி 1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் வள்ளுவப்பாக்கம் கிராமத்தில் வசித்து வருகிறேன். 2ம் பிரதிவாதியின் அதே ஊர் தான். வாதியை எனக்குத் தெரியும். அவரும் அதே ஊர் தான். நான் 2019 வருடமே இவ்வழக்கில் எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வாதி வழக்குக்கு முன்பு வழக்கு அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அந்த அறிவிப்பை நான் பெற்று நான் பதில் அறிவிப்பு அனுப்பினேன். அந்த பதில் அறிவிப்பை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் நினைவில்லை. **வா.த.சா.ஆ.3** ல் குறிப்பிட்டுள்ள முகவரி என்னுடைய முகவரி தான். 2ம் பிரதிவாதிக்கும் வழக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது. அவர் வாங்கியிருப்பார்.

2. தற்போது சாட்சி வழக்கு பின்னிட்டு நீதிமன்றத்திலிருந்து மட்டும் தான் அறிவிப்பு வந்தது என்று கூறுகிறார். வழக்கு அறிவிப்பு என் முகவரிக்கு வந்ததாக என்னிடம் யாரும் கூறவில்லை. வாதி அனுப்பிய வழக்கு அறிவிப்பை நானும் 2ம் பிரதிவாதியும் வாங்க மறுத்துவிட்டோம் என்றால் சரியல்ல. நானும் 2ம் பிரதிவாதியும் சேர்ந்து தான் எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளோம். வாதி தாக்கல் செய்துள்ள ஆவணம் பற்றி எதிர் வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் எனக்குத்

தெரியாது. வாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பார்வையிட நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தேன். அதனை பார்வையிட்ட பின்பு தான் எதிர் வழக்குரை தாக்கல் செய்தேனா என்றால் ஆமாம்.

3. நாங்கள் ஆரம்பித்த பிளாஸ்டிக் நிறுவனத்தின் பெயர் VSGL நிறுவனமாகும். VSGL என்றால் வள்ளுவபாக்கம், சாமுண்டீஸ்வரி, குணஸ்ரீ மற்றும் லோகப்பிரியா. சாமுண்டீஸ்வரி என்னுடைய சகோதரி. குணஸ்ரீ என்னுடைய மகள். லோகப்பிரியா என்பவர் 2ம் பிரதிவாதியின் மகள் பெயர். வாதியின் மகள் பெயர் சுபா என்றால் சரிதான். வள்ளுவபாக்கத்தில் வாதி மகள், என்னுடைய மகள் மற்றும் 2ம் பிரதிவாதியின் மகள் ஆகியோர் பெயரின் முதல் எழுத்தை வைத்து நிறுவனம் ஆரம்பித்தோம் என்றால் சரியல்ல. VSGL விரிவாக்கம் குறித்து எதிர் வழக்குரையில் சொல்லவில்லை. சாமுண்டீஸ்வரியிடமிருந்து கடன் வாங்கி நிறுவனம் ஆரம்பித்தாகக் கூறுவதற்கு எவ்வளவு கடன் தொகை என்று எதிர்வழக்குரை மற்றும் முதல் விசாரணையில் சொல்லவில்லை. நிறுவனத்தின் வரவுசெலவு கணக்குகளை நான் தான் பாரமரித்து வந்தேன்.

4.நான் முதுநிலை பொறியியல் பட்டப்படிப்பு படித்துள்ளேன். என் படிப்பை வைத்து தான் நிறுவனம் தொடங்கப்பட்டதா என்றால் 2ம்பிரதிவாதியின் அனுபவத்தை வைத்து தொடங்கபட்டது. எதிர் வழக்குரையில் வாதியின் வழக்கை மட்டும் மறுத்தளித்து எங்களின் நிலைபாட்டை சொல்லவில்லை என்றால் அது தேவையில்லை என்பதால் சொல்லவில்லை. செல்வராஜ் இடத்தில் நிறுவனம் ஆரம்பிக்கபட்டது என்றால் சரிதான். அந்த இடத்திற்கு முன்பணத்தை நாங்கள்

செலுத்தியதாகவும், அதனை எப்போது செலுத்தினோம் என்ற விபரத்தையும் எதிர்வழக்குரையில் சொல்லவில்லை. செல்வராஜ் இடம் நாங்கள் ஒப்பந்தம்போட்டோம்.

5. என்னிடம் காட்டப்படும் **வா.த.சா.ஆ.1** தான் அந்த ஒப்பந்தம் என்றால் சரிதான். வாதியுடன் சேர்ந்து நிறுவனம் நடத்த ஒப்பந்தம் எதுவும் போடவில்லை. **வா.த.சா.ஆ.1** ஐ குறிப்பாக எதிர் வழக்குரை மற்றும் முதல் விசாரணையில் மறுக்கவில்லை என்றால் சரியல்ல. **வா.த.சா.ஆ.1** ஐ பற்றி விளக்கமாக எதிர் வழக்குரை மற்றும் முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் நினைவில்லை. எதிர் வழக்குரையில் கூறாத விபரங்கள் பற்றி முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் எனக்குத் தெரியாது. முதல் விசாரணை 2ம் பத்தியில் சென்னை சென்ற தேதி குறித்து குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

6. இது சம்பந்தமாக தான் நான் தகவல் அறியும் சட்டத்தின் கீழ் ஆவணங்கள் பெற்று தாக்கல் செய்துள்ளேன். **பி.த.சா.ஆ 3** ல் வரிசை எண்1 ல் 11.09.2025 தேதி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். **வா.த.சா.ஆ.1** 8 வருடம் கழித்து எவ்வாறு தயார் செய்ய இயலும் என்றால் **பி.த.சா.ஆ 3** அளித்த அதிகாரியிடம் கேட்க வேண்டும்.

**(மதிய உணவு இடைவேளைக்காக குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

**<u>பிரதிவாதி சாட்சி 1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

7. முதலில் எங்களுக்காக ஆஜரான வழக்கறிஞருக்கு கொடுத்த வக்காலத்தில் நானும் 2ம் பிரதிவாதியும் ஒரே நேரத்தில் கையொப்பம் செய்தோமா என்றால் ஞாபகம் இல்லை. இரண்டாவதாக எங்களுக்காக ஆஜரான வழக்கறிஞருக்கு கொடுத்த வக்காலத்தில் நானும் 2ம் பிரதிவாதியும் ஒரே நேரத்தில் கையொப்பம் செய்தோம். இரண்டு வக்காலத்திலும் உள்ள என் கையொப்பங்கள் வெவ்வேறாக உள்ளது என்றால் சரிதான். அதே போல் 2ம் பிரதிவாதியின் கையொப்பங்கள் வெவ்வேறாக உள்ளது என்றால் எனக்குத் தெரியாது.

8. முதல் விசாரணையில் உள்ள கையொப்பமும், 02.03.2026 மற்றும் 28.04.2026 ஆகிய தேதிகளில் போட்ட கையொப்பங்கள் வெவ்வேறாக உள்ளது என்றால் சரிதான். **வா.த.சா.ஆ.1** ல் இடது பக்கம் உள்ள முதல் கையொப்பம் யாருடையது எனக்கு தெரியாது. 2வது கையொப்பம் யாருடையது என்று எனக்கு தெரியாது. அதேபோல் வலது பக்கம் உள்ள கையொப்பம் வாதியின் கையொப்பம் என்றால் அவருடைய கையொப்பம் நான் பார்த்தது இல்லை. நானும் 2ம் பிரதிவாதியும் போட்டோம். செல்வராஜும் அதில் கையொப்பம் போட்டார். **பி.த.சா.ஆ.3 ல்** பக்கம் 87 ல் MS. தனசேகர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் MR என்று தான் போடப்பட்டுள்ளது. அதில் வேறு நபர்களுக்கு MR அல்லது MRS என்று போடப்படவில்லை.

9. **பி.த.சா.ஆ.3 ல்** ஆண்டு தணிக்கை செய்யப்பட்டுள்ளது என்ற குறிப்பு இல்லை. எனவே **பி.த.சா.ஆ.3** ஏற்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. சார்பதிவாளருக்கு அந்த ஆவணம் எவ்வாறு கிடைக்கப்பெற்றது என்ற குறிப்பில்லை

என்றால் சரிதான். எனவே **பி.த.சா.ஆ.3** ஏற்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. **பி.த.சா.ஆ.3 ல்** 24.07.2012 முதல் 22.09.2014 வரை உள்ள ஆவணங்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நிறுவனத்தின் கணக்கு வழக்கு ஆவணங்கள் எங்குள்ளது என்று எனக்குத் தெரியாது. வாதி நிறுவனத்திற்காக ரூ.8,78,520 என்னிடம் கொடுத்துள்ளார் என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் பேப்பரிலுள்ள கையொப்பம் யாருடையது என்று எனக்குத் தெரியாது. வேடவாக்கம் மேட்டுக்குடிசை தயாளன் மகன் சீனிவாசனை தெரியுமா என்றால் தெரியும். அவர் வாதியின் அக்கா மகன்.

10. ஜானகிபுரம் பழனியப்பனை எனக்கு தெரியாது. **வா.த.சா.ஆ.1** ஆவணத்தில் கண்ட சாட்சிகளை விசாரித்தால் **வா.த.சா.ஆ.1** பற்றி தெரிய வரும் என்றால் அது பற்றி நான் கருத்து கூற விரும்பவில்லை. நான் அளித்த புகாரின் மீது காவல் துறையினர் நடவடிக்கை எடுத்தார்களா என்றால் நீதிமன்றத்தில் வழக்கு உள்ளதால் பார்த்து கொள்ளுமாறு கூறிவிட்டனர். அதற்கு எழுத்து மூலமாக எதுவும் பதில் கொடுக்கவில்லை. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே வாதி 2016 ம் ஆண்டு படாளம் காவல் நிலையத்தில் என் மீது புகார் அளித்தார் என்றால் சரிதான். அந்த புகாரை நான் பார்க்கவில்லை.

11. **வா.த.சா.ஆ.1** போலியான ஆவணம் என்று வாதி மீது குற்ற மேல் நடவடிக்கை எடுத்தேனா என்றால் **பி.த.சா.ஆ.1** பிறகு எனக்கு தெரியாது. அது குறித்து எனக்கு தெரியாது. ஏன் செய்யவில்லை என்றால் எனக்கு தெரியாது. **பி.த.சா.ஆ.1** யார் சொல்லி தயாரித்தது என்றால் நானே தான் எழுதினேன். **பி.த.சா.ஆ.1**

எந்த தேதியில் எப்போது வாதி மிரட்டினார் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். **பி.த.சா.ஆ.1** நானும் 2ம் பிரதிவாதியும் சேர்ந்து தான் கொடுத்தோம். இருவரையும் எவ்வாறு வாதி மிரட்டினார் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வழக்க மேம்படுத்துவதற்காக **பி.த.சா.ஆ.1** ஐ தயார் செய்துகொண்டேன் என்றால் சரியல்ல. அதனால் **பி.த.சா.ஆ.1** வாதி என்னிடம் பணம் பறிக்க முயன்றார் என்று கூறுவது தவறு என்று சொன்னால் சரியல்ல. கூடுதல் எதிர் வழக்குரை தாக்கல் செய்யமால் **பி.த.சா.ஆ.1 முதல் 3** ஆவணங்கள் பற்றி நான் சாட்சியம் அளிக்க இயலாது என்று சொன்னால் சரியல்ல. நான் கைப்பட கணக்கு வழக்குகள் எழுதி வாதியிடம் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

12. **பி.த.சா.ஆ.1** ன் கீழ் வாதியை அழைத்து விசாரித்தார்கள். சாட்சி சீனிவாசன் என்பவரை விசாரிக்கவில்லை. என் புகார் தவறானது என்றாலும், அதனால் தான் மேல் நடவடிக்கை எடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. நிறுவனத்தை 2016 ல் முடிவிட்டோம். நிறுவனத்திற்கு உரிமம் பெற்றோம். அதனை தாக்கல் செய்யவில்லை. நிறுவனத்தை முடியதற்கான அறிக்கையை தாக்கல் செய்யவில்லை. உரிமம் வாங்கும் போது நிறுவனம் செல்வராஜ் இடத்தில் இயக்கப்படுவதாக தான் குறிப்பிட்டோம். கணக்கு வழக்குகள், யார்யார் தொகை போட்டுள்ளார்கள் என்று எதிர்வழக்குரையில் குறிப்பிடவில்லை. கணக்கு வழக்குகளை ஆய்வு செய்யவில்லை. நிறுவனத்தை 6 மாதத்தில் மூடியதாக எதிர் வழக்குரையில் சொல்லவில்லை. நிறுவனத்தின் இயந்திரங்களை யாரிடம், எவ்வளவு ரூபாய்க்கு விற்றேன் என்று நினைவில்லை. அந்த தொகையை நானும் 2ம்

பிரதிவாதியும் பிரித்துக்கொண்டோம் என்றால் செல்வராஜிடம் பெற்ற கடனை அடைத்தோம். மேற்கண்ட விபரத்தை எதிர்வழக்குரையில் சொல்லவில்லை. நான் தவறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கை தவிர்த்து வாதிக்கும் எனக்கும் எந்த தகராறும் இல்லை. வழக்கறிவிப்பை ஒப்புகொள்ளமால் மறுத்ததால் சட்டப்படி இவ்வழக்கை ஒப்புக்கொண்டதாக ஏற்க வேண்டும் என்றால் சரியல்ல. வாதி கோரியாறு தீர்ப்பாக வேண்டுகிறேன் என்றால் சரியல்ல.